அரியலூர் மாவட்டம் திருமானூர் மேற்கு ஒன்றியம் சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் கீழகாவட்டாங்குறிச்சி கலைஞர் திடலில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கழக இலக்கிய அணி துணை தலைவர், கவிச்சுடர் கவிதைப்பித்தன், கழக இளம் பேச்சாளர் சௌமியா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகரன், லதாபாலு, ஒன்றிய செயலாளர் ரெ.அசோகசக்ரவர்த்தி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

சூலூர் வைத்தியநாத சுவாமி திருக்கோயிலில்

மே மாதத்திற்குள் குட முழுக்கு நடத்தப்படும்!

பேரவையில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, மார்ச் 22 -

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம் (20-03-2025) வினா விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு , சூலூர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.கந்தசாமி, இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். தங்கபாண்டியன், கோயம்புத்தூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அம்மன் கே.அர்ஜுனன் ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

வி.பி.கந்தசாமி : சூலூர் தொகுதி, செஞ்சேரி மலையடிபாளையம் அருள்மிகு மந்திரகிரி வேலாயுதசுவாமி திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பாக திருமண மண்டபம் கட்ட அரசு ஆவனசெய்யுமா ?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: உறுப்பினர் கோரிய மந்திரகிரி திருக்கோயிலானது ஒரு குன்றின் மேல் அமைந்திருக்கும் திருக்கோயில். மலை அடிவாரத்தில் அந்த திருக்கோயிலுக்கு சொந்தமான இடம் இருக்கின்றது. இங்கு உபயதாரர் வாயிலாக திருமண மண்டபம் கட்டுவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டு உபயதாரர் யாரும் முன் வராததாலும், கேள்வி கேட்ட சட்டமன்ற உறுப்பினரும் அதற்குண்டான முயற்சி எடுக்காததாலும் முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு சென்று ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டுவதற்குண்டான பணிகள் மூன்று மாதங்களில் துவங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

வி.பி.கந்தசாமி : கடந்த 2024 மார்ச் 24ஆம் தேதி ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த செஞ்சேரிமலை வேலாயுதகூவாமி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்த முன்னாள் முதலமைச்சர் எங்கள் பொதுச் செயலாளர் வருங்கால முதலமைச்சர் எடப்பாடி அவர்களையும், கொறடா அவர்களையும், துணைத் தலைவர் அவர்களையும் வணங்கி கோவை மாவட்டம் சூலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட செஞ்சேரி மலை, அருள்மிகு மந்திரகிரி வேலாயுதசுவாமி திருக்கோயிலை சுற்றியுள்ள 72 கிராம மக்கள் மட்டுமின்றி அனைத்து பகுதியிலும் உள்ள மக்கள் வரக்கூடிய ஒரு அருமையான திருக்கோயிலாகும். ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் சத்குரு சம்கார பூஜையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்கிறார்கள். மேலும் கிருத்திகை, கந்த சஷ்டி, அமாவாசை, பௌர்ணமி, சூரசம்ஹாரம் போன்ற நாட்களில் அதிகமான பக்தர்கள் வந்து செல்கிறார்கள். ஒவ்வொரு முகூர்த்த நாட்களிலும் சுமார் பத்துக்கும் மேற்பட்ட திருமணங்கள் இத்திருக்கோயிலில் நடைபெறுகிறது. தை தேரோட்டத்தில் மட்டும் சுமார் ஒரு லட்சத்து 56 ஆயிரம் பக்தர்கள் கலந்து கொள்கின்ற திருக்கோயிலாகும். அதிகமாக அன்னதானங்கள் நடக்கின்ற காரணத்தினாலும், திருமண மண்டபம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். அதற்கு நிதி இல்லை என்ற அமைச்சர் கூறுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 25 லட்சம் கொடுப்பதற்கு நீங்கள் வாய்ப்பு கொடுத்தால் கண்டிப்பாக சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். அதேபோல இப்போது அதற்கு புதிதாக நிர்வாகிகள் நியமித்திருக்கிறீர்கள். அந்த நிர்வாகிகளும் முயற்சி செய்தால் கண்டிப்பாக அந்த திருமணம் மண்டபம் கட்டக்கூடிய வாய்ப்பு இருக்கும். எத்தனையோ திருக்கோயிலுக்கு திருப்பணி செய்கின்ற அமைச்சர் திருக்கோயிலின் அருளை பெறுவதற்கு அவர் திருமண மண்டத்தையும் ராஜ கோபுரம் அமைத்துக் கொடுப்பதற்கும் முன் வருவாரா என்பதை கேட்டு அமைகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கனவே இந்த மண்டபப் பணி மூன்று மாதங்களில் துவங்கப்படும் என்ற உறுதி அளித்திருக்கின்றோம். சட்டப்பேரவை உறுப்பினர் நிதி இது போன்ற காரியங்களுக்கு பயன்படுத்த முடியாது. ஆகவே பொதுநல நிதி அல்லது பெரிய திருக்கோயில் இருந்து கடனாக பெற்று நிச்சயம் அந்த மண்டபத்தின் உடைய பணிகள் மூன்று மாதங்களில் துவங்கப்படும் என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

வி.பி.கந்தசாமி: மூன்று மாதத்தில் துவங்கப்படும் என்று கூறிய அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியை கூறி, சூலூர், அருள்மிகு வைத்தீஸ்வரன் உடனுறை தையல்நாயகி அம்மன் திருக்கோயில் திருப்பணியும், இருகூரில் அமைந்துள்ள அருள்மிகு நீலகண்டேஸ்வரர் திருக்கோயில் திருப்பணியும் கடந்த இரண்டு ஆண்டுகள் நடைபெற்று வருகிறது. கூடிய விரைவில் திருப்பணிகள் முடித்து குடமுழுக்கு நடத்துவதற்கு அமைச்சர் முன் வருவாரா என்று கூறி அதற்கு தன்னுடைய சொந்த மாத சம்பளத்தில் இருந்து ஒரு லட்சம் ரூபாய் நன்கொடையும், அதை திருப்பணிக்கு கொடுப்பதற்கு தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: வைத்தியநாத சுவாமி திருக்கோயிலை பற்றி ஒரு சிறப்பு உண்டு. அந்த திருக்கோயிலின் கல்யாண நந்திக்கு எண்ணெய் சாற்றி அந்த பிரசாதத்தை உட்கொண்டால் திருமணம் போன்ற காரியங்கள் நடைபெறும் என்றும், மூலவருக்கு எண்ணெய் சாற்றி உட்கொண்டால் நோய் தீர்க்கின்ற மாமருந்தாகவும் பக்தர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த திருக்கோயிலின் திருப்பணியானது 90 சதவீதம் அளவிற்கு நிறைவு பெற்றிருக்கின்றது. இன்னும் 10 சதவீத பணிகள் மே மாதத்திற்குள் முடிக்கப்பட்டு, நாள் குறிக்கப்பட்டு குடமுழுக்கு நடத்தப்படும். அமைச்சர் என்ற முறையில் நானும் கலந்து கொள்கிறேன். உறுப்பினர் அவர்களும் அந்த குடமுழுக்கில் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

எஸ்.தங்கபாண்டியன்: இராஜபாளையம் தொகுதி தேவதானத்தில் அமைந்துள்ள அருள்மிகு தவம்பெற்ற நாயகி அம்மன் திருக்கோயிலில் தெப்பம் சீரமைக்கும் பணிகளுக்கு 5 கோடி 55 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் முடிந்து முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி மூலமாக பயன்பாட்டு கொண்டு வந்த பின் 30 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த வாரம் மாசிமகம் அன்று தெப்ப தேரோட்டம் நடைபெற்றது. இதற்கு உறுதுணையாக இருந்த முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்டத்தின் அமைச்சர் அவர்களுக்கும், பொதுமக்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொண்டு, மேலும் நிலுவையில் உள்ள பிளேவர் சாலை அமைத்தல், மின்விளக்கு அமைத்தல் இவற்றிற்கெல்லாம் நிதி ஒதுக்கீடு செய்திட அறநிலையத்துறை அமைச்சர் ஆறுபடை முருகனாக விளங்கிக் கொண்டிருப்பவர், சிவனுக்காக இந்த நிதியை ஒதுக்குவாரா என்பதை அறிய விரும்புகின்றேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : சித்தமெல்லாம் சிவமயம் என்ற வார்த்தைக்கு இணங்க இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இதுவரையில் 557 சிவன் திருக்கோயில்களுக்கு மாத்திரம் குடமுழுக்கு நடத்தப்பட்டு இருக்கின்றது. நம்முடைய உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் பட்டியலை அளித்தாதென்றால் அதற்கும் ஆவணம் செய்து அந்த பணிகளையும் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றி தருவோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கே.அர்ஜுனன்:– கோவை வடக்கு தொகுதியில் இந்து அறநிலையத்துறை சார்பில் மகளிர் தொழில்நுட்ப பாலிடெக்னிக் கல்லூரி அமைக்க முன்வருமா? போதுமான இடவசதியும் உள்ளது. போதுமான நிதியும் மருதமலை தேவஸ்தான போர்டில் இருந்து கிடைக்கப்பெறும். ஆகையால் இந்த பாலிடெக்னிக் கல்லூரியை அமைச்சர் தயவு கூர்ந்து அதை கட்டித்தர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். சட்டமன்ற நிதியிலிருந்து நிதி தர வேண்டும் என்றால் தருவதற்கு ரெடியா இருக்கிறேன். கட்டி தர முன் வருவாரா என அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: ஏற்கனவே பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் ஒரு தொழில்நுட்ப கல்லூரி 668 மாணவர்களுடன் சிறப்போடு நடத்தப்பட்டு வருகின்றது. உறுப்பினர் கோரிய அந்த திருக்கோயில் சார்பில் நடத்தப்படும் மேல்நிலைப் பள்ளியில் 900 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். நேரடியாக மூன்று முறை களஆய்வு செய்து அந்த பள்ளிக்கு தேவையான கூடுதல் கட்டிடங்களையும் சுமார் ரூ.1.58 கோடி செலவில் கூடுதல் கட்டிடங்களையும் கட்டுகின்ற பணி ஏறக்குறைய 70% நிறைவடைந்து இருக்கின்றது. நீங்கள் கூறிய இந்த தொழில் நுட்ப கல்லூரியை பொறுத்த அளவில் தொடர் செலவு, தொடரா செலவு என்று இரு வகையாக பிரிக்கப்பட வேண்டியுள்ளது. தொடரா செலவு சுமார் 14 கோடி ரூபாய் வருகின்றது. நீங்கள் அந்த கேள்வியை கேட்டவுடன் குறிப்புகளை கேட்டேன். தொடர் செலவு என்று பார்த்தால் ஆண்டிற்கு இரண்டரை கோடி ரூபாய் வருகின்றது. மருதமலை திருக்கோயில் ஏற்கனவே 37 கோடி ரூபாய் செலவில் பெருந்திட்ட வரைவு பணிகளை எடுத்திருக்கின்றோம். உலகமே அதிசயிக்கின்ற வகையில் அங்கே முருகனுக்கு ஒரு பிரம்மாண்ட சிலை அமைக்க தமிழக முதல்வர் உத்தரவிட்டிருக்கின்றார். இது போன்ற பணிகளுக்கு நிதி ஆதாரம் தேவைப்படுவதால், நீங்கள் வைத்த கோரிக்கையை மறுக்க மாட்டோம். வாய்ப்பு இருந்தால் களஆய்வு செய்து முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று நிச்சயமாக நிறைவேற்றுவதற்குண்டான சாத்திய கூறுகளை ஆராய்ந்து முயற்சிப்போம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

திருப்பூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட தெற்கு மாநகரம், நல்லூர் பகுதி, 46வது வார்டு மணியகாரம்பாளையத்தில், திராவிடமாடல் அரசின் 4ஆண்டு கால ஆட்சியின் மாபெரும் சாதனைகளையும் தமிழ் மக்களுக்கு கொடுத்த எண்ணற்ற நலத் திட்டங்களையும் மக்களுக்கு விளக்கிடும் வகையில் பகுதி செயலாளர் மேங்கோ அ.பழனிச்சாமி தலைமையில் வட்டக் கழக செயலாளர் சி.பத்திரன் வரவேற்புரையில் நடைபெற்ற தெருமுனைப் பிரச்சார கூட்டத்தில் மாவட்டச் செயலாளர், க.செல்வராஜ் எம்.எல்.ஏ., கரூர் முரளி உரையாற்றினர். இதில் டிகேடி மு.நாகராசன், சுப்பிரமணியம், நாகராஜ், செ. திலகராஜ் உள்ள பலர் கலந்துகொண்டனர்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஒன்றியம், தொப்பம்பட்டி ஊராட்சி, மடத்துப்பாளையம் குக்கிராமத்தில் புதிய துணை சுகாதார நிலையத்தை அமைச்சர், மு.பெ.சாமிநாதன், அமைச்சர், என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர். இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, ஒன்றியச் செயலாளர், எஸ்.வி.செந்தில்குமார், தாராபுரம் வட்டார மருத்துவ அலுவலர் மரு.தேன்மொழி உள்பட பலர் உள்ளனர்.

ரூ.854.37 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும்

இராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் சோதனை ஓட்டம் விரைவில் தொடங்கும்!

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தகவல்!

நாமக்கல், மார்ச். 22-

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம் சந்திர சேகரபுரத்தில் ரூ.854.37 கோடி மதிப்பீட்டில் இராசிபுரம் கூட்டு குடிநீர் திட்டத்தின் பணிகள் நடைபெற்று வருவதை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

ஆய்வுக்குப் பின் கே.ஆர். என்.இராஜேஸ்குமார் தெரிவித்ததாவது, நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் சட்டமன்ற தொகுதி மற்றும் அதனை சுற்றி யுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கிடும் வகையில் ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்பாக எடப்பாடி கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. நாளடைவில் மக்கள் தொகை பெருக்கம், குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு ஒரு புதிய கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்துவது அத்தியாவசியமாகிறது. குறிப்பாக, பொதுமக்களுக்கு சீரான தங்குதடையின்றி காவிரி குடிநீர் வழங்குவது என்பது இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும்.

கடந்த 2021 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு இப்பகுதியின் சட்டமன்ற உறுப்பினரும் மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சருமான மருத்துவர் மா.மதிவேந்தன் அவர்களும், நானும் முதலமைச்சர் அவர்களிடம் இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஒரு புதிய கூட்டுக் குடிநீர் திட்டத்தினை செயல்படுத்திட வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். அதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையில் இராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பொதுமக்களின் கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில் உடனடியாக ரூ.854 கோடி மதிப்பீட்டில் புதிதாக கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்துவதற்கான நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிட்டார்

அதனைத் தொடர்ந்து, நாமக்கல் மாவட்டத்தில் இராசிபுரம் நகராட்சி, இராசிபுரம், புதுச்சத்திரம், நாமகிரிப்பேட்டை மற்றும் வெண்ணந்தூர் ஆகிய 4 ஊராட்சி ஒன்றியங்கள், நாமகிரிப்பேட்டை பட்டணம், சீராப்பள்ளி, ஆர்.புதுப்பட்டி, பிள்ளா நல்லூர், வெண்ணந்தூர், அத்தனூர் மற்றும் மல்லசமுத்திரம் ஆகிய 8 பேரூராட்சிகள் என மொத்தம் 523 கிராமங்களில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நாள் ஒன்றுக்கு 76.14 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கிடும் இராசிபுரம் கூட்டு குடிநீர் திட்டம் ரூ.854.37 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இன்றைய தினம், கூட்டுக் குடிநீர் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி சுமார் 98 சதவீத திட்டப்பணிகள் நிறைவடைந்துள்ளன. விரைவில் அனைத்து பணிகளும் நிறைவடைந்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் வழங்கப்பட உள்ளது. குறிப்பாக, வருகின்ற 01.04.2025 அன்று சோதனை ஓட்டம் நடைபெற உள்ளது. சோதனை ஓட்டமானது ஆறு மாத காலத்திற்கு நடைபெற உள்ளது. இக்காலத்தில் குடிநீர் திட்டப் பணியானது அனைத்து பகுதிகளுக்கும் தங்கு தடை இன்றி விநியோகிக்கப்படுகிறதா என்பது குறித்து ஆய்வுக்கு உட்படுத்தப்படும். சோதனை ஓட்ட காலத்தில் ஏதேனும் பிரச்சனைகள் இருப்பின் அவைகள் முற்றிலுமாக களையப்பட்டு பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர் இந்த ஆண்டு இறுதிக்குள் வழங்கப்பட உள்ளது. இக்குடிநீர் திட்டத்தின்படி இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, புதுச்சத்திரம் மற்றும் வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியங்கள் 8 பேரூராட்சிகள் இராசிபுரம் நகராட்சி ஆகிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள மேல் நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் தரைமட்ட நீர் தேக்க தொட்டிகள் இணைக்கப்பட்டு பராமரிக்கப்பட உள்ளது. மேலும் 1235 கி.மீ நீளத்திற்கு குடிநீர் இணைப்பு குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. மேலும், மல்லசமுத்திரம், எலச்சிப்பாளையம் மற்றும் பரமத்தி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 547 கிராமங்களுக்கு வழங்கும் பகுதி இரண்டு திட்டத்தினையும் சேர்த்து, 156 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளும், 162 மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகளும் புதிதாக அமைக்கப்படுகின்றன.

மேலும், சேலம் மாவட்டம், எடப்பாடி அருகே நெடுங்குளம் பகுதியில் நீரேற்று நிலையம் அமைக்கப்பட்டு காவிரி ஆற்றில் இருந்து நீர் ஏற்றம் செய்யப்பட உள்ளது. தொடர்ந்து, காட்டுப்புதூர் அருகே முறையாக குடிநீர் சுத்திகரிக்கப் பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட உள்ளது. இக்குடிநீர் திட்ட பணிகள் நிறைவடையும் போது, இராசிபுரம் நகராட்சி, 8 பேரூராட்சி கள், இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, புதுச்சத்திரம் மற்றும் வெண்ணந்தூர் ஆகிய நான்கு ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்து 523 குடியிருப்பு கள், மல்லசமுத்திரம் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு உட்பட்ட 547 குடியிருப்பு கள் என மொத்தம் 1070 குடியிருப்பு பகுதிகளைச் சேர்ந்த சுமார் 8 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு 76.14 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட சுகாதாரமான குடிநீர் விநியோகம் உறுதி செய்யப்படும். தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்ட வரும் குடிநீர் திட்டங்களில் இது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

இத்திட்டமானது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அறிவிக்கப் பட்டு உடனடியாக அதற்கான நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு இந்த ஆட்சியிலேயே பணிகள் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட உள்ளது. இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறை வேற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், திட்டத்திற்கு உறுதுணையாக இருந்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்கும் இப்பகுதி மக்களின் சார்பாக நன்றினை தெரிவித்துக் கொள்கிறோம் என கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி தெரிவித்தார்கள். இந்த ஆய்வின்போது, இராசிபுரம் நகர்மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர், அட்மா குழு தலைவர் கே.பி.ஜெகநாதன், தமிழ்நாடு குடிநீர் வடிவால் வாரிய மேற்பார்வை பொறியாளர் பிரபாகரன், நிர்வாக பொறியாளர்கள் மோகன்தாஸ், ஜெயகோபு, செல்வராசு, உதவி நிர்வாக பொறியாளர் மஞ்சு, உதவி பொறியாளர் சங்கீதா ஆகியோர் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் மாநகராட்சியில் மேயர் சத்யா தலைமையில் உள்ள 45 வார்டுகளில் கோடை காலத்தில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையைத் தடுக்க முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்வது தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது கூட்டத்தில், ஆணையர் (பொ) மாரிசெல்வி ,செயற்பொறியாளர், உதவி பொறியாளர், இளநிலை பொறியாளர்கள், மின் பணியாளர்கள், குடிநீர் ஆய்வாளர்கள். குழாய் திறப்புனர்கள் மற்றும் குடிநீர் விநியோக பணியாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர்

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சொ. காவேரிமணியம்

மார்ச் 22 (2006)

மதுரை மாவட்டக் கழகச் செயலாளராகவும், மாநகரச் செயலாளராகவும் சிறப்பாக பணியாற்றியவர்.

தலைமைக் கழகத் தீர்மானக்குழுத் தலைவராகவும், உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினராகவும், மதுரை வடக்கு மாவட்ட தொழிற்சங்கத் தலைவராகவும் திறம்பட பணியாற்றியவர்.

1971ல் திருப்பரங்குன்றம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றி நற்பெயர் பெற்றவர்.

"எந்த நிலையிலும் கொள்கை உறுதியில் ஒரு சிறிதும் குலையாமல்; அழுத்தம் திருத்தமாக அரசியல் செயல்பாடுகளை அஞ்சா நெஞ்சுடன் ஆற்றிவந்த அரிமா அவர். எளிமையான வாழ்க்கை. எஃகு உள்ளம் – என்றைக்கும் எங்களோடு ஒருவராக இருந்து இயக்க வளர்த்த இனிய உடன்பிறப்பு" எனத் தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்கு அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்தார்கள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.